புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# வீரயுக நாயகன் வேள்பாரி நாவல் உணர்த்தும் பாரியின் பண்பு நலன்கள்

வே. ரோஸ்லின்,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
பதிவு எண்: 20221174022009
ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

முனைவர் செ. சாந்தி,
நெறியாளர், உதவிப்பேராசிரியர்,
வ. உ. சி கல்லூரி, தூத்துக்குடி.

ஆய்வுச்சுருக்கம்

புதினத்தின் உறுப்புகளில் முதன்மையானது பாத்திரப்படைப்பு. அப்புதினத்தில் இடம்பெறும் பாத்திரங்கள் உயர்ந்த பண்புகளைக்கொண்டு அமைகின்றன. பாத்திரத்தின் பண்புகளைப் படைப்பாளர் ஒவ்வொருவரும் தேர்ந்தெடுத்த கதைக்கருவிற்கு ஏற்பப் படைத்து, வாசகர்கள் மனம் கவரும்படி தருகின்றனர். வரலாற்றை அடிப்படையாகக்கொண்டு எழும் புதினங்களில் ஓரளவு ஆசிரியருடைய சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுகிறது. வரலாற்றில் நடைபெற்ற நிகழ்வுகளை முதன்மையானதாக வைத்துக்கொண்டு சில இடங்களில் புனைவுச் செய்திகளையும் அமைத்திருப்பர். தன்னிகரில்லாத் தலைமை கதைமாந்தரான பாரியின் கொடை உள்ளதாலும், அன்பு வழிபட்ட வாழ்வியல் மரபாலும் அவனது புகழ் தமிழ் நிலமெங்கும் பரவியிருந்தது. தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்களான சேர சோழ பாண்டியர்கள், குறுநில மன்னன் பாரியினது பறம்பு மலையின் நிலவளம் கண்டு வெதும்பிப் பறம்பின்மீது போர் தொடுத்தனர். அந்நிகழ்வைப் பற்றி சு.வெங்கடேசன் அவர்கள் எழுதிய நாவலே வீரயுக நாயகன் வேள்பாரி. பிறருக்கு ஈவதே உயர்ந்த குடி பிறந்தவரின் பண்பாகும் என்ற வள்ளுவரின் வாக்கின்படி வாழ்ந்த வள்ளல் பாரியின் பண்புநலன்களை இந்நாவல் வழி ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## ஆய்வு அணுகுமுறை

ஆசிரியரின் இலக்கியப் படைப்புகளை ஆதாரமாகக் கொண்டு ஆராய்ந்து நோக்கும் போது, வரலாற்றியல் நோக்கில் புதுமைப் பார்வையைக் காண முடிகிறது. அவ்வடிப்படையில் வரலாற்றியல் அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. சங்க இலக்கியத் தரவுகளின் அடிப்படையில் பாரி பற்றிய செய்திகளைத் தொகுத்தும், பகுத்தும் ஆய்வு மேற்கொள்ளப்படுவதால் பகுப்பாய்வு அணுகுமுறையும், அதனை விளக்கி உரைப்பதால் விளக்கமுறை அணுகுமுறையும் கையாளப்பட்டுள்ளன.

## முன்னுரை

பறம்பு மலையையும் அதில் வாழும் குடிகளையும் நேசித்தும் சுவாசித்தும் ஆட்சி செய்து பாதுகாத்துக் கொண்டிருந்தவன் வள்ளல் பாரி. மேற்குத் தொடர்ச்சி மலையில் வாழ்ந்து வரும் பதினான்கு இனக்குழுக்களுக்குத் தலைமையாக இருக்கும் வேளிர்குலத்தின் தலைவன் பாரி. இவரது காலம் கி.பி இரண்டாம் நூற்றாண்டு. இவர் மூவேந்தர்களையும் விட பெரும்புகழ் பெறக் காரணமாக இருந்தது, அவரது வள்ளல் தன்மையே ஆகும். போற்றுவோர் போற்றுவனவெல்லாம் இல்லாதவர்க்கு ஒன்று வழங்குவோரின் புகழைக் குறித்தே அமையும் என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க மாரிபோல மக்களைப் புரந்ததால் கடையேழு வள்ளல்களில்

*முதன்மையானவனாகப் பாரி போற்றப்பட்டான். அவனின் பண்பு நலன்களை வீரயுக நாயகன் வேள்பாரி நாவல் வழி எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

*பாரியின் கொடைத்தன்மை*

*வளமுடைய பறம்பு மலையை ஆண்ட சிற்றரசன் வேள்பாரி; அவன் வீரத்திலே சிறந்தவன்; பண்பிலே நிறைந்தவன்; எல்லாவற்றிற்கும் மேலாக கொடையிலே இணையற்றவன்; பாரியின் புகழ் தமிழ் நிலமெங்கும் பரவியிருந்தது. இடைவிடாது பாடித்திரியும் பாணர்கள் தங்கள் குரல்நாளங்கள் விடைப்புற்று வலி எடுக்கும்போது பாரியைப் பற்றியே பாடுகின்றனர். சொற்களுக்குள் உருளும் பாரியின் நினைவு, குரல்நாளங்களுக்கு இதம் தருவதாகப் பாணர்குலமே கருதியது. தோற்பறையை நெருப்பிலே சூடேற்றி ஒலி எழுப்பும் பக்குவத்துக்குக் கொண்டுவருதல்போலப் பாடிக்களைத்த குரல்நாளங்களை மீண்டும் பாடும் பக்குவத்துக்குக் கொண்டுவர பாரியைப்பற்றிய பாடல்கள் உதவி செய்வதாகவும் பேசினார்கள்.*

*''ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது*
*ஊதியம் இல்லை உயிர்க்கு''[1]*

*என்ற குறளின்படி தன்னிடம் உள்ளதைப் பலருக்கும் பகுத்துக்கொடுத்து புகழோடு வாழ்ந்தவன் பாரி. பாரியைப் பற்றிய பாணர்களின் பேச்சும், பாட்டும், இசையும், கூத்தும் மூவேந்தர்களின் ஆழ்மனதில் வெறுப்பை இடைவிடாது உமிழ்ந்து கொண்டிருந்தன. பாரியின் புகழ், பறம்பின் மலைவளம் ஆகியவையே மூவேந்தர்களின் பொறாமைக்கும் வெறுப்பிற்கும் காரணமாக அமைந்தது. பறம்பின் மலைவளத்தை அடையவேண்டி, பறம்பின்மீது போர்தொடுத்தனர். பறம்பினை முற்றுகையிட்டும் மூவேந்தர்களால் பாரியை வெல்ல முடியவில்லை. அப்போது மூவேந்தர்களைப் பார்த்து கபிலர், 'இரண்டு யாழ்களையும் இருவர் கையில் எடுத்துக்கொள்ளுங்கள். இரண்டு பெண்களை அழைத்துக் கால்சலங்கையைக் கட்டிக்கொள்ளச் சொல்லுங்கள். அனைவரும் உடன் வாருங்கள். நான் பாடுகிறேன். பாட்டிசைத்து பறம்பு ஏறிய குழுக்கள் கேட்பதை 'இல்லை' எனச்சொல்லும் வழக்கம் பாரியிடம் இல்லை. மொத்த பறம்பினையும் வழங்கி விடுவான்' என்றார். கபிலரின் இவ்வார்த்தை பாரியின் கொடைத்தன்மையை வெளிப்படுத்துவதாக உள்ளது.*

*மழவன்குடியைக் கூத்திலே மயக்கும்குடி என்பர். இவர்கள் பறம்பின் தலைநகரான எவ்வியூர் வருகின்றனர். அங்கே கிடைக்கும் சோமப்பூண்டுபானத்தைக் குடித்து மயங்கிச்சரிந்தனர். எந்த மதுவுக்கும் இத்தகு மயக்கம் கிடையாது எனக் கூறிக்கொண்டே தெளிவடைந்தபின் மீண்டும்மீண்டும் குடித்தார்கள். அவர்களுக்கு ஏற்பட்ட பெருமயக்கத்தால் கூத்தினை நிகழ்த்தாது மறுமுறை வந்து ஆடுகிறோம் எனச் சொல்லிப் புறப்பட்டனர். அவர்களுக்குப் பதினாறு பெரும்பானைகள் நிறைய சோமப்பூண்டு பானத்தைக் கொடுத்தனுப்பினான் பாரி.அதனைத் தன் குலத்தினருக்காகச் சுமந்துகொண்டு சென்றனர் மழவன்குடியினர். இதுவரை தாங்கள் பெற்ற பரிசினிலேயே மிகச்சிறந்த பரிசு இதுதான் என்றுக்கூறி பாரியை வாழ்த்திப் புறப்பட்டுச் சென்றனர். ஆளுடைநம்பி என்று புகழப்பெற்ற சுந்தரரும் தாம் அருளிய திருத்தொண்டத் தொகையில் பாரியையே கொடைக்கு எல்லையாகச் சுட்டுகிறார். மழவன்குடிக் கூட்டத்தில் இருந்த மூன்றுபேர் சேர ஒற்றர்கள். ஆகவே அத்தனைப் பானைகளும் சேரனின் அரண்மனைக்குப் போய்ச்சேர்ந்தன. மழவன்குடியின் தலைவன், 'என் கூட்டத்தில் ஒற்றர்கள் இருப்பதால்தான் ஆட்டம் நிகழ்த்தாமல் மயக்கங்கொண்டே நாங்கள் புறப்படுகிறோம் என்று பாரியிடம் சொன்னேன். அவனோ, பெரும்பரிசையும், சோமப்பூண்டு பானத்தையும் கொடுத்து அனுப்பினான். இனி இப்பானத்தின் ஒரு மிடறுகூட எங்களுக்குக் கிடைக்கப் போவதில்லை' என்று எண்ணிக் கொண்டிருந்த பொழுதுதான் செம்மாஞ்சேரல் முதல்மிடற்றினை அருந்தினான். வானத்தில் பறப்பது போலவும், நீரில் மிதப்பது போலவும் உணர்ந்தான். மீண்டும்மீண்டும் குடித்து மகிழ்ந்தான். அப்போது அரண்மனைக்கு வந்த வடதேசத்து முனிக்கும் கொடுத்தான். குடித்த மகிழ்வில், இன்னொரு குவளைக் கேட்டார் முனி. ஊற்றிக் கொடுப்பவன் மன்னனைப் பார்த்தான். மன்னனுக்கோ என்ன செய்வதென்று புரியவில்லை. பாதிக்குவளை ஊற்றிக்கொடு என்று சொல்லவேண்டும்போல் இருந்தது. மழவன்குடித் தலைவன் தொலைவில் இருந்தபடி இக்காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்தான். ஒரு குவளை முகந்துகொடுக்க இவ்வளவு தயங்கும் மனிதர்கள்*

வாழும் உலகில்தான் பாரி என்னும் பெருங்கொடையாளனும் வாழ்கிறான் என்று அவனைப் புகழ்ந்து பாடுகின்றான். இந்நிகழ்வு பாரியின் கொடைத்தன்மையை மிகுவிப்பதாக அமைகிறது.

குலம் காக்கும் தலைவன்

மூவேந்தர்களின் தலைமையை ஏற்க மறுத்த இனக்குழுக்கள் பெரும்பாலும் மலையும் காடும் சார்ந்த நிலப்பகுதியில் வாழ்ந்து வந்தனர். வைகைக் கரையில் அமைந்த கூடல் மாநகரில் வாழ்ந்த அகுதைகுலமே வேளாண் அறிவின் நுணுக்கத்தை இந்த உலகிற்குக் கண்டறிந்து சொன்னது. கொற்கை பாண்டியர்கள் இக்குலத்தை அழித்து தமக்கு அடிமைகள் ஆக்கிக்கொண்டனர்.

எருக்கு மலையைச் சார்ந்தவர்கள் நாகர் குடியினர். நாகங்கள் இவர்களின் சொல் கேட்கும் தன்மை உடையவை. நாகங்களைக் கட்டுப்படுத்தும் திறமை இவர்களுக்கு உண்டு. சேரமன்னன் பெருஞ்சேரல் தனது சுயநலத்திற்காக இக்குலத்தையே அழித்து விட்டான்.

செம்மலையின் அடிவாரத்தில் வாழ்ந்த செம்பாதேவியின் குலமே முதன்முதலாக கால்நடைகளை வளர்க்கப் பழகியது. கால்நடைகளின் கோமியம் வெவ்வேறு வகையில் வளைந்து வடிவம் கொள்வதை வைத்து கோலமிடக் கற்றுக்கொண்ட குலம் இது. இதனால் கோலநாடு என்னும் பெயர் பெற்றது. உறையூர் தலைவன் கிள்ளி இவர்களோடு போரிட்டு இக்குலத்தையே அழித்தான். இவ்வாறு மூவேந்தர்களால் அளிக்கப்பட்ட ஒவ்வொரு குலத்திலும் எஞ்சியுள்ள மக்கள் பறம்பு மலையைத் தஞ்சமடைந்தனர். இவ்வாறு அழிக்கப்பட்ட இனக்குழுக்களுக்கு மறு வாழ்வளித்து, அழியக்கூடாத மனிதப்பண்பின் பேரடையாளமாகத் திகழ்ந்தான் வேள்பாரி. தன்னை நாடித் தஞ்சம் புகுந்தவர்களுக்கு அடைக்கலம் அளிப்பதோடு, மூவேந்தர்களை எதிர்க்கும் வீரமும் தீரமும் பெற்ற ஒப்பற்ற தலைவனாகத் திகழ்ந்தான் பாரி.

உயிர்களின்மீதான இரக்க உணர்வு

''மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை''[2]

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, பாரி அஃறிணை உயிர்களிடமும் கருணைக் காட்டுவதில் தலைசிறந்து விளங்கினான். படர்வதற்குக் கொழுகொம்பின்றித் தவித்த முல்லைக்கொடிக்குத் தான் ஏறிவந்த தேரினையே ஈந்த இரக்கமுடையவன் பாரி.

பறம்பினர் தமது செல்வங்களைப் பாழி நகரில் சேமித்து பாதுகாத்து வைப்பர். பாரி வசிக்கும் ஊரிலிருந்து தேரிலேறி, பாழி நகருக்குச் செல்லவேண்டும். ஆனால் எவ்வளவு பதற்றமான சூழ்நிலையிலும் கார்காலத்து இரவில் பாழி நகருக்கு தேரிலேறிச் செல்லமாட்டான் பாரி. ஏனெனில் அந்நேரத்தில் மான்கள் இணைசேரும். தனது தேரின் ஒலி அவற்றின் இணக்கத்தைக் குறைத்துவிடும் என்பதை உணர்ந்து அதனைத் தவிர்த்து விடுவான். இவ்வாறு அஃறிணை உயிர்களின்மீதும் இரக்கம் கொண்டவனாகப் பாரி காணப்படுகிறான்.

மூவேந்தர்களுக்கு இடையேயான போரின்போது அவர்களது யானைப் படையை அழிக்க பறம்பினர் நினைத்தபோது அஞ்சி ஓடும் யானைகளையும், வீரர்களையும் விட்டுவிடுங்கள். அவர்களை அழிக்கக் கூடாது என்று ஆணையிட்டான் பாரி. எதிரி நாட்டுக்குள் போரிட நுழைந்தவர்களில் பிடிபட்டவர்களை முழுமையாக அழித்தொழிப்பதே மரபு. ஆனால் பாரியோ, எதிரிகளின் மீதும் இரக்கம் கொண்டவனாகக் காணப்பட்டான் என்பதை இந்நிகழ்வு வெளிப்படுத்துகிறது.

பறம்பின் தென்திசைக் காவலனான நீலனது திருமணத்திற்காகப் பாரி காரமலையடிவார ஊருக்குச் சென்றிருந்தான். கரியனூர் பெரியாத்தா கூட்டத்தை விலக்கிக்கொண்டு வாஞ்சையோடு பாரியைக்காண வந்தாள். வயதான நிலையில் மலையேறி எவ்வியூர் வர இயலாது. ஆகவே இந்த மணநாளிலாவது உன்னைப் பார்த்து விடலாம் என்று எண்ணியே வந்தேன் என்கிறாள். அதைக்கேட்டப் பாரியின் கண்கள் கலங்கின. சூல்மருது எப்படி இருக்கிறது? எனக்கேட்டான் பாரி. 'இந்த மழைக்காலத்தில தப்பிச்சிருச்சு. ஆனால் இன்னும் எத்தனை காலமோ?' என்கிறாள் பெரியாத்தா. அவளது குடிலருகே உள்ள மரமது. பாரியின் நலங்கேட்டல்கள் எல்லாம் இப்படித்தான் இருக்கும். இவ்வாறு ஓரறிவு முதல் ஆறறிவு வரை அனைத்து உயிர்களின்மீதும் இரக்க உணர்வு உடையவனாகப் பாரி காணப்பட்டான்.

''அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்

*என்பும் உரியர் பிறர்க்கு"*[3]

*என்ற திருக்குறளுக்கு ஏற்ப தம் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தும் பிறருக்கென எண்ணி வாழ்ந்தவன் வேள்பாரி.*

வேட்டையாடுதலும் தாக்குதல் உத்தியும்

வேட்டையாடல் தொடங்கி போர் புரிதல்வரை எல்லாவித ஆயுதங்களையும் பயன்படுத்த கற்றிருந்தான் பாரி. எட்டுவயதில் காடறிந்து வரச்சென்ற சிறுவன் பாரி, மாவீரனாகத்தான் வீடு திரும்பினான். வேட்டையின் பொருளே தாக்குதலும் தப்பித்தலும்தான். இவ்விரண்டிலும் தேர்ந்தவனாகப் பாரி காணப்பட்டான்.

பறம்பின் குறிசொல்லும் விலங்கான தேவவாக்கு விலங்குகளைக் கவர்ந்துவர பாண்டியன் அனுப்பிய திரையர்கள் பறம்பு காட்டிலிருந்து தேவவாக்கு விலங்குகளைக் கூடைகளில் எடுத்துக்கொண்டு விரைந்து கொண்டிருந்தனர். அவர்களைத் துரத்திக்கொண்டு ஓடினான் பாரி. அங்கே கலவி முடிந்து தீராப்பசியோடு இருந்த இரு சுண்டாப்பூனைகளைக் கண்டான். மனிதனை மூர்க்கமேறச் செய்யும் அணுவல்லிப்பூண்டின் இலைகளைச் சாப்பிட்ட பாரி மிகவேகமாக ஓடினான். அவனைத் துரத்தி வந்தன சுண்டாப்பூனைகள். பாரியும், வெறிகொண்ட இரு விலங்குகளும் ஓடிய வேகம் இதுவரை காடு பார்த்திராதது. திரையர்களை நெருங்கிய பாரி, இடப்புறப் பள்ளம் நோக்கி எவ்விப்பாய்ந்து சரிந்தான். பாரியை விட்டுவிட்டு, கையளவு தொலைவில் ஓடிக்கொண்டிருந்த திரையர்களைத் துரத்த ஆரம்பித்தன சுண்டாப்பூனைகள். இவ்வாறு விலங்குகளை வேட்டையாடுவது மட்டுமின்றிப் பகைவர்களைத் தாக்குவதற்கும் அவைகளைப் பயன்படுத்தினான் பாரி என்பது புலனாகிறது.

மதிநுட்பமும் வீரமும்

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"[4]

என்ற திருக்குறளுக்கு ஏற்ப பறம்பு மலையையும் அதன் குடிகளையும் பாதுகாத்தவன் வள்ளல் பாரி. கழுகின் மூக்கைப் போன்றது பாரியின் கவனிப்பு. எவ்வியூரில் இருந்தாலும் பறம்புமலையில் எண்திசையிலும் நிகழும் மாற்றங்களைத் துல்லியமாகக் கவனித்தறியும் நுண்மான் நுழைதிறன் உடையவன் பாரி.

தாளமலையைச் சேர்ந்த நெடுங்காடர்களின் துணையுடன் சோழவேந்தன் செங்கனாச்சோழன் பறம்புநோக்கிப் படையெடுத்து வந்தான். மனிதனே புகமுடியாத பறம்பின் கொடிய காட்டுப்பகுதியில் நுழைந்து பதினான்கு நாட்களாகியும் பாரி, தாக்குதலை தொடங்கவில்லை. தமது படையின் வலிமை கண்டு மிரண்டு போனதால்தான் தாக்குதலை மேற்கொள்ளாது பதுங்கி இருக்கின்றான் பாரி என்கிறான் சோழத் தளபதி உரையன். அதற்கு நெடுங்காடர்களின் தலைவனான துணங்கன் கூறிய பதில் செங்கனாச் சோழனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. 'வட்டாற்றுப் பாதையை ஏன் நாம் தெரிவு செய்தோம்? இந்தக் கொடுங்கோடையிலும் இவ்வளவு பெரும்படைக்கும் எப்படி நீராகாரத்தை உருவாக்குகிறோம்? என எல்லாமே அவர்களுக்கு விடை இல்லாத கேள்விகள். ஆனால் பாரி மிகச்சிறந்த வீரன். இக்கேள்விகளுக்கு விடை கண்டறியாமல் தாக்குதலைத் தொடங்கமாட்டான். தீர ஆலோசனை செய்த பின்னரே போரைத் தொடங்கும் மதிநுட்பம் உடையவன் பாரி' என்கிறான் துணங்கன். அதனைக் கேட்ட செங்கனாச்சோழன் திகைத்தான். பல்லாயிரம் படைவீரர்களோடு பறம்புக்குள் இத்தனை நாட்களாக ஊடுருவி வந்துவிட்ட நிலையிலும் தன் தளபதி ஒருவன் பாரியின் வீரத்தை வியந்து பேசுவது அவனுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. நீ பாரியைப் பார்த்திருக்கிறாயா? எனச் சோழன் துணங்கனிடம் கேட்க, அருகில் பார்த்ததில்லை. மிகத் தொலைவில் இப்போதுதான் பார்த்தேன் என்கிறான். திடுக்கிட்ட சோழன், எங்கே பாரி? என்றான். மலைமுகட்டில் என அண்ணாந்து காட்டினான். அவர்கள் அங்கே பார்த்த பொழுது கதிரவனது ஒளி கண்களைக் கூசச்செய்தது. அவன் பாரி என்று எப்படி முடிவு செய்தாய்? என வினவ, துணங்கன், 'இவ்வளவு பெரும்படையை முழுமையாகப் பார்க்கவும் கணிக்கவும் ஒருவன் எந்த உயரத்தைத் தேர்வு செய்கிறான் என்பதை வைத்தே சொல்லிவிடலாம், அவன் யாராக இருக்கும் என. நான்கு நாட்களாக அவன் மேலும் செல்லாமல் கீழும் இறங்காமல் ஒரே மட்டத்தில் வந்து

கொண்டிருக்கிறான். அதனால்தான் இன்று முடிவுக்கு வந்தேன், அவன் பாரியாகத்தான் இருக்கும் என்று' எனக் கூறினான்.

''எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு''[5]

என்ற குறளுக்கு ஏற்ப பாரியின் மதிநுட்பமும், வீரமும் அனைவரும் போற்றும்விதமாக அமைந்திருந்தது. இவ்வாறு பறம்பின்மீது படையெடுத்து வந்தவர்களை ஆராய்ந்தறிந்து, அதன் பின்னரே அவர்களை முறியடிக்கும் உத்திகளைப் பின்பற்றி வெற்றிகண்டான் பாரி.

நட்புணர்வு

பாரியின் கொடை மனமறிந்து அவனைக் காண காடுமேடெல்லாம் ஏறி வந்த கபிலரிடம் பாரி, 'இனியாவது உங்களை எனது தோளில் தூக்கிச்செல்ல அனுமதிப்பீர்களா?' எனக்கேட்டு தோளில் தூக்கி வந்தார். மேலும் பறம்பு மலையின் குளிரைக் கபிலரால் எதிர்கொள்ள முடியவில்லை.அதனால் பேரெலி வேட்டையாடி, எலிமயிர் போர்வையைச் செய்வதும், கபிலரை விட்டுப் பிரிய மனமில்லாத பாரி, ஒரு நாள் உங்களின் வானமாக நாங்கள் விரிந்திருப்போம் எனக் கூறி அவரைப் பறம்பிலேயே தங்க வைக்க முயற்சிப்பது இருவருக்கும் இடையேயான தலைசிறந்த நட்புணர்வை எடுத்துக்காட்டுகிறது.

பறம்பிற்கும் மூவேந்தர்களுக்கும் இடையேயான போர் தொடங்க உள்ள சூழ்நிலையில், பாரி, மிகக்குறைந்த மனிதர்கள் மட்டுமே வாழும் அரியகுடியான அரிமான்களுக்குப் போரில் கலந்துகொள்ள அனுமதி அளிக்கவில்லை. 'நான் போருக்காக மலையை விட்டு கீழிறங்கப் போகிறேன். நான் சென்றபின் என் தோழன் கபிலனை அழைத்துச்சென்று பாதுகாத்து வைத்திருங்கள்' என்று அரிமான் குலத்தலைவனிடம் பாரி கூறினான். இந்நிகழ்வு மூலம் பாரிக்குக் கபிலருடனான நட்பின் ஆழத்தை அறிய முடிகிறது.

பெருந்தகு சிறப்பின் நட்பிற்கு ஒல்லாது
ஒருங்குவரல் விடாஅது ஒழிக எனக்கூறி,
இனையை ஆதலின் நினக்கு மற்றுயான்
மேயினேன் அன்மை யானே; ஆயினும்,
இம்மை போலக் காட்டி, உம்மை
இடையில் காட்சி நின்னோடு
உடன்உறைவு ஆக்குக, உயர்ந்த பாலே![6]

என்ற கபிலரது புறநானூற்று பாடல் அடிகள் இருவரது நட்பின் ஆழத்தை வெளிப்படுத்துகின்றன.

காதல் உணர்வு

காதல் உணர்வு மென்மையானது; இனிமையானது; இரண்டு மனங்களின் இணைவு; அன்பின் வெளிப்பாடு; வேள்பாரி நாவலின் நாயகன் பாரிக்கும் ஆதினிக்கும் இடையேயான காதல் உணர்வை, படிப்பவர்கள் மனம் கவரும்படி கூறிச் செல்கின்றார் சு. வெங்கடேசன். நெடு உயரம் மற்றும் திரண்டு விரிந்த கம்பீரமான தோள்களையுடையவன் பாரி. பொதினிமலைத் தலைவன் மேழகனின் மகள் ஆதினி. செம்மாஞ்சேரலுடனான போரில் பாரி ஈட்டிய வெற்றி மலைநாடெங்கும் பரவியிருந்தது. ஆதினியின் கனவுக்குள் அவ்வெற்றி நாயகனே நிலைகொண்டிருந்தான். அவனைக் காணும் நாள் எந்நாளோ? என ஏங்கிக்கொண்டிருந்த ஆதினியின் கண்முன்னே பாரி வந்து நின்றான். ஒருவரை ஒருவர் பார்த்த கணத்தில் நகர்தலற்று நின்றனர். இருவரிடையே காதல் மலர்ந்தது. ஆதினி பாரியிடம், 'வேளிர் கூட்டத்தின் இணையற்ற வீரனாக உம்மைப்பற்றிய கதை காடெங்கும் பரவிக் கிடக்கிறது. உன்னைப் பார்க்காமலே நான் காதல்கொண்டு கிடந்தேன். உனது வருகை, நான் காதல்கொண்டு நீண்ட நாட்களுக்குப் பின்னர்தான் நடந்தது' என்று கூறினாள். மேழகனும் திருமண ஏற்பாடு செய்தான். பொதினியின் குலமகள், பறம்புத் தலைவனை மணந்து எவ்வியூர் புகுந்தாள். பாரியும் ஆதினியும் ஒருவர்மேல் ஒருவர் தீராக்காதல் கொண்டவர்களாகவும், ஒருவரையொருவர் புரிந்துகொண்டு சிறந்த இல்லற வாழ்வை வாழ்ந்தனர்.

''யாயும் ஞாயும் யார் ஆகியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளீர்?

*யானும் நீயும் எவ்வழி அறிதும்?*
*செம்புலப் பெயல் நீர் போல*
*அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"*[7]

*என்ற பாடலுக்கு ஏற்ப பறம்பின் குலத்தலைவனும் தலைவியும் ஒருவரிலொருவர் அன்பில் திளைத்தவர்களாகக் காணப்பட்டனர்.*

*முடிவுரை*

*வரலாற்றுத் தொன்மைகளையும், பகைவர்களால் வெற்றிக்கொள்ள முடியாத இயற்கை சூழல்களையும் கொண்டது பறம்புமலை.*

*"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல*
*நாட வளந்தரு நாடு"*[8]

*என்ற திருக்குறளுக்கு ஏற்ப குன்றாத வளமுடைய பறம்பு மலையை ஆண்ட சிற்றரசன் பாரி. மூவேந்தர்களால் அடிமைப்படுத்தப்பட்ட இனக்குழுக்களுக்கு அடைக்கலம் அளித்து அவர்களை இன அழிவிலிருந்து காத்தவன். ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு உயிர் வரை பாதுகாக்கும் இரக்கக் குணம் மிக்கவன். எல்லா மக்களும் உறவினர்களே எல்லா நாடுகளும் பண்பட்ட ஊர்களே என்ற உயரிய வாழ்வியலை உணர்த்தும் அறநெறிக் கொள்கையைக் கொண்டவன் வள்ளல் பாரி. பாரிக்கென்று தனித்த சொத்தும், எப்பாடுபட்டாகிலும் அதை சேமித்து பெருக்க வேண்டும் என்ற பெரும் தாகமும் இல்லை. இயற்கை பிற உயிர்களுக்கு வடிவமைத்த குண எல்லைகளைப் பாரி கடந்து போகவில்லை. பல இனக்குழுக்களின் அருங்காட்சியகமாக விளங்கிய பறம்பு நாட்டின் ஒப்பற்ற தலைவனான வேள்பாரியின் கொடைத்தன்மை, இரக்க உணர்வு, நுண்ணறிவுத் திறன், நட்புணர்வு, காதலுணர்வு முதலான பண்புகளை வீரயுக நாயகன் வேள்பாரி நாவல்வழி இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.*

*அடிக்குறிப்புகள்*

*1. திருக்குறள், 231*
*2. திருக்குறள், 244*
*3. திருக்குறள், 72*
*4. திருக்குறள், 388*
*5. திருக்குறள், 424*
*6. கபிலர், புறநானூறு, பா. எண் : 236*
*7. செம்புலப் பெயல் நீரார், குறுந்தொகை, பா. எண் :40*
*8. திருக்குறள், 739*

********* ********* ********** ********* ********* ********** ********** **********